**செய்தி வெளியீடு எண்: 04/03/2021** **நாள்: 05.03.2021**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ நிலையங்களில் நீடித்த சுற்றுச் சூழலுக்கு உகந்த பசுமைத் தொட்டிகள் அமைத்தல்**

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் பல்வேறு நீடித்த சுற்றுச் சூழலுக்கு உகந்த வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் முனைப்புடன் செயல்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் நிலையங்களின் நடைமேடை நிழற்பகுதியில் அதிக அளவு பிராணவாயுவை வெளியிடவும் மெட்ரோ நிலையங்களின் அழகான தோற்றத்திற்கு உயிர் ஊட்டவும் சியோபைட்ஸ் வகைத் தாவரங்களைக் கொண்ட பசுமைத் தொட்டிகளை அமைக்க முடிவு செய்துள்ளது.

அதன் முன்னோட்டமாக, சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருளால் தயாரிக்கப்பட்ட பசுமைத் தொட்டிகள் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மணலால் நிரப்பப்பட்ட தட்டுகளில் இந்த பசுமைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இதனால் உபரிநீர் இதில் சேகரிக்கப்பட்டு, நடைமேடையில் தண்ணீர் சிந்தாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

ரெபிக்ஸ் எக்சல்சா (Lady Palm) பென்டானஸ், ஷெப்பிளரா வேரிகேட்டட் (குட்டை குடைத் தாவரம்) போன்ற அழகான உள் தாவரங்கள் / செடிகள் பசுமைத் தொட்டிகளில் நடப்பட்டுள்ளன. இதனால் கரியமில வாயு உறிஞ்சப்பட்டு மெட்ரோ நிலையங்களில் உள்ள வெளிக்காற்று சுத்திகரிக்கப்படுகிறது.

இத்தோடல்லாமல், நீடித்த சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பசுமைப் பகுதி, திட்ட செயல்பாட்டுப் பகுதியில் அதிக அளவு இருக்கும் வகையில், ஒரு சுற்றுச் சூழல் துடிவினைப் பிரிவு போன்ற பல்வேறு புத்தாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்ந்து மாசுவைக் குறைப்பதற்கு உதவி செய்வதுடன் சுற்றுச் சூழல் பாதிப்பினையும் குறைக்கின்றது.

கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய முயற்சியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப. பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**